## 2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
## O.S.No.46/2015

06.07.2026 பி.வா.சா.1 திரு. ராஜதுரை
(பி.வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.)

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அரசு அலுவலகங்கள் சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் விடுமுறை என்றால் சரிதான். அலுவலகங்கங் இயங்கினாலும் சனி ஞாயிறு கிழமைகளில் கையெழுத்து இடமாட்டோம் என்றால் அவசர பணி என்றால் சனி ஞாயிறு கிழமைகளில் கையெழுத்திடுவோம். வருகை பதிவேட்டில் மட்டும் கையெழுத்திடுவதில்லை. சனி ஞாயிற்று கிழமைகளில் எல்லா அலுவலர்களும் வருவார்களா என்றால் பணி இருப்பவர்கள் வருவார்கள். 1958 காலகட்டத்தில் என்ன நடந்தது என்று நேரில் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆவணங்கள் மூலம் தெரியும்.

2. தான செட்டில் மெண்ட் பத்திரத்தின் அசல் சென்னை தலைமையகத்தில் உள்ளது என்றால் இருக்கலாம். நான் தான செட்டில்மெண்ட் ஆவணம் தலைமை அலுவலகத்தில் உள்ளதா என்று விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக நான் சாட்சியம் அளிக்க ஆரம்பித்து 6 மாதங்கள் ஆனது என்றால் சரிதான். கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு பணி மாறுதல் செய்யப்பட்டு 6 மாதங்கள் ஆகிறது. இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க முடிவு செய்யப்பட்ட பின் இந்த வழக்கு சம்பந்தமான கோப்புகளில் அசல் ஆவணம் உள்ளதா என்று விசாரித்தேனா என்றால் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேடி பார்த்தேன். சென்னை தலைமை அலுவலகத்தில் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் மூலம் தேடி பார்த்தேன்.

3. ஆவணங்களின் நகல் வேண்டும் என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.8 மனுவில் நாங்கள் கேட்கும் ஆவணங்கள் இல்லை என்று பதிவுகள் உள்ளதா என்றால் இல்லை. அனைத்து ஆவணங்களின் அசல்களும் எங்களது அலுவலக கோப்பில் உள்ள போதும் அதை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ஆவணம் நகல் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணங்கள் குறித்து எனக்கு நேரில் தெரியாது என்றால் அசல் ஆவணங்கள் குறித்து தெரியாது. நகல் மூலம் தெரியும்.

4. பி.வா.சா.ஆ.9 ஆவணம் பிறப்பிக்கப்பட்டதாக கூறும் காலகட்டத்தில் நான் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 9 தான செட்டில்மெண்ட் ஆவணம் கோடிட்ட இடங்களில் நிரப்பும் வகையில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கோடிட்ட இடங்களில் நிரப்பபப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் கோடிட்ட இடங்களில் யார் நிரப்பினார்கள் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் எங்கள் அலுவலகத்தில் உள்ள உயர் அலுவலர்கள் பூமிதான ஆய்வாளர் நிரப்பியிருப்பார் என்று கூறினார்கள்.

5.  பி.வா.சா.ஆ 9 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.  ஒரு சொத்து அரசாங்கத்திற்கு தானமாக கொடுக்கும் போது பதிவு செய்யப்படும் என்றால் அரசிதழில் வெளியிட்டு ஆட்சேபணை ஏதேனும் உள்ளதா என்று தெரிந்து கொண்ட பின்பு பதிவு செய்யப்படும். மேற்படி நடைமுறைகளை பின்பற்றினார்களா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.  ஆவணங்கள் மூலம் தெரியும்.  மேற்படி நடைமுறைகளை பின்பற்றி சொத்தின் சுவாதீனத்தை தானமாக ஏற்றுக் கொண்டோம் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. நான் அழகிய மணவாளன் பிள்ளையின் கையெழுத்தை பார்த்துள்ளேனா என்றால் ஆவணங்களில் பார்த்துள்ளேன்.  தான பத்திரத்தில் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் தானமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் பட்டா எண் 1026 என்றும் குலவணிகர்புரம் கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.  பட்டா எண் 1026 ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.  எனக்கு முன்பு இருந்த அலுவலர்கள் தாக்கல் செய்தார்களா என்று எனக்கு தெரியாது.

7.தானம் செய்வோர் கையெழுத்துக்கு மேல் சீல் வைத்து தான் கையெழுத்து என்றும் நேரடியாக கையெழுத்து செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.  நான் கூறும் அழகிய மணவாளன் பிள்ளை என்ற நபருக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது தான பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.  நான் கூறும் தானப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள தேதி 19.10.1958  ஞாயிற்று கிழமை விடுமுறை தினம் என்பதால் தானப் பத்திரம் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல.

8.  26.11.2013 தேதியில் அழகிய மணவாளன் பிள்ளை என்பவர் சார்பு நீதிமன்றத்தில் ஆஜராகி இந்த சொத்துகளைப் பொறுத்து சாட்சியம் அளித்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.  அவர் நீதிமன்றத்தில் தான பத்திரத்தில் கூறப்படும் சொத்து எதுவும் என்னிடம் இல்லை என்றும் தானம் எதுவும் நான் கொடுக்கவில்லை என்று சொன்ன விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.  என்னுடைய கர்ணம் அறிக்கையின் படி அவரை 15 வயதில் இருந்து 37 வயது வரை அவர் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்று சொல்லியிருக்கும் விபரம் தெரிந்து கொண்டே வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. நான் தாக்கல் செய்ததாக கூறும்  பி.வா.சா.ஆ 9 ஆவணம் அழகிய மணவாளன் பிள்ளை ஏற்படுத்தவில்லை என்றும் வழக்கிற்காக அவர் ஏற்படுத்தியதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.  நான் அரசு அலுவலர் என்பதால் அரசாங்கத்திற்கு சாதகமாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.07.07 11:15:46 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.